

# தி.மு.க. இளைஞர் அணி

## கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பரப்புரை சுற்றுப்பயண அறிவிப்பு

2026 சட்டமன்றத் தேர்தலில் கழகத் தலைவர் – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து, கழக இளைஞர் அணிச் செயலாளரும் மாண்புமிகு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பரப்புரை மேற்கொண்டு வருகிறார். சென்னை மேற்கு மாவட்டத்தில் சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி, சென்னை வடக்கு மாவட்டத்தில் பெரம்பூர் ஆகிய தொகுதிகளில் இன்று (19.4.2026) மேற்கொள்ளவுள்ள பரப்புரை சுற்றுப்பயண விவரம் வருமாறு:

**19.4.2026 ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தொகுதி | இடம் |
|---|---|---|
| மாலை 3.30 மணி | சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி | 63 (அ), 114, 114 (அ), 115 வட்டங்கள் |
| இரவு 7.00 மணி | பெரம்பூர் | அசோக் பில்லர், வியாசர்பாடி |
| இரவு 7.45 மணி | | எம்.ஆர்.நகர், கொடுங்கையூர் |
| இரவு 8.30 மணி | | பக்தவத்சலம் நகர், வியாசர்பாடி |



**அன்பகம்**
தேனாம்பேட்டை,
சென்னை – 18
நாள் : 18.4.2026

கலைஞர் 100 1924 - 2023

# நாட்டுப் பற்றைப் பற்றி எங்களுக்கு யாரும் பாடம் எடுக்கத் தேவையில்லை!

## நாடாளுமன்றத்தில்–பா.ஜ.க. எம்.பி.யை வெளுத்து வாங்கிய ஆ. இராசா!

புதுடில்லி, ஏப்.19-

நாடாளுமன்ற மக்களவையில் தொகுதி மறுவரையறை மசோதா எதிர்க் கட்சிகளின் கடும் எதிர்ப்புகளுக்கு இடையே நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்டது.

**மறுவரையறை சட்ட மசோதா**

நாடாளுமன்ற சிறப்பு கூட்டத் தொடர் 16.4.2026 அன்று தொடங்கியது. மக்கள் தொகை அடிப்படையில் நாடாளுமன்ற, சட்டமன்றத் தொகுதி களை மாற்றியமைக்கும் பொருட்டு தொகுதி மறுவரையறை சட்ட மசோதாவை இந்த கூட்டத் தொடரில் ஒன்றிய அரசு நிறைவேற்ற வுள்ளது. இதற்கான விவாதம் இரு அவைகளிலும் நடைபெற்றது. தொகுதி மறுவரையறை செய்தால் நாடாளுமன்றத்தில் 543 என இருக்கும் உறுப்பினர்கள் எண்ணிக்கை 850 ஆக உயரும் என சொல்லப்படுகிறது.

அதேசமயம் தென் மாநிலத்தின் பிரதிநிதித்துவம் இதனால் குறையும் எனவும் கூறப்படுகிறது. அதனால் தென் மாநிலங்களில் தொகுதி மறுவரையறை விசயத்திற்கு கடும் எதிர்ப்பு நிலவுகிறது. குறிப்பாக தமிழ்நாடு அரசு ஆட்சேபனை தெரிவித்துள்ளது. கூட்டத் தொடரில் கருப்பு உடை அணிந்து தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றனர். அதன் எதிரொலியாக தி.மு.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் தொகுதி மறுவரையறை தொடர்பான மசோதா நகலை எரித்தும், வீடுகளில் கருப்புக் கொடி கட்டியும் தங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்தனர்.



இதற்கிடையில், "மக்களவையில் பெங்களூரு தெற்குத் தொகுதியைச் சேர்ந்த பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர் தேஜஸ்வி சூர்யா பேசுகையில்,

"மக்கள்தொகை வளர்ச்சியைக் கட்டுப் படுத்தியுள்ள தெற்கு மற்றும் சிறிய மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு தற்போது முன்மொழிந்துள்ளதை விட சிறந்த இடங்கள் கிடைக்காது. தொகுதி மறுவரையறைக்குப் பிறகு தென் மாநிலங்களுக்கு அதிக இடங்கள் கிடைக்கும். இதை விட சிறந்த ஒப்பந்தம் கிடைக்காது. தொகுதி மறுவரையறையை ஒரு பாதகமாகப் பார்க்கக் கூடாது" என்று தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர், தொகுதி மறுவரையறை தொடர்பாக தமிழ்நாட்டில் திமுக நடத்தும் போராட்டங்கள் நாடகம் என விமர்சித்தார். மசோதாக்கள் குறித்து மக்களைத் தவறாக வழிநடத்த எதிர்க் கட்சிகள் திட்ட மிட்ட பிரச்சா ரத்தை மேற்கொள்கிறது.

கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரையிலும் தேசிய ஒருமைப்பாட்டையே நாங்கள் ஆதரிக்கிறோம். ஆனால் பிரிவினைவாத மொழியில் பேசும் தி.மு.க.வின் அரசியலை எதிர்க்கிறோம். அவர்களை நிராகரிக்கிறோம் என்று குற்றம் சாட்டினார்.

**எங்களுக்கு பாடம் நடத்த வேண்டாம்**

அவர் பேசியதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் பேசிய தி.மு.க. எம்.பி., ஆ.ராசா, "1971 ஆம் ஆண்டு பாகிஸ்தான் போர் தொடுத்த போது நாட்டைக் காக்க ரூ.6 கோடி நிதி கொடுத்தோம். இது மற்ற மாநிலங்களை விடவும் அதிகம். 1999 ஆம் ஆண்டு வாஜ்பாய் பிரதமராக இருந்த போது கார்கில் போருக்காக கலைஞர் தலைமையிலான அரசு ரூ.100 கோடி கொடுத்தது.

நாங்களா பிரிவினை அரசியல் செய்கிறோம்?

நாட்டுப்பற்றைப் பற்றி அவர் எங்களுக்கு பாடம் எடுக்கத் தேவையில்லை.

நாங்களும் தேச உணர்வுக்கு ஆதரவாகவே நிற்கிறோம். ஒரே விஷயம் என்னவென்றால் நாங்கள் தனித்த அடையாளத்துடன் இருக்க விரும்புகிறோம். நீங்கள் இந்தி, சமஸ்கிருதத்தை திணிக்கும்போது அதை எதிர்க்கிறோம். மாநில சுயாட்சிக்கு மரியாதை கொடுக்காத போது அதை எதிர்க்கிறோம்"

இவ்வாறு ஆ.ராசா எம்.பி. காட்டமாக பதில் அளித்தார்.

## தொகுதி மறுவரையறை: பெரிய வெற்றி தமிழ்நாட்டுக்கு!

# பெருந்தோல்வி ஒன்றிய அரசுக்கு! ஏன்? எப்படி?

### சென்னை சிந்தனையாளர் மன்றம் சார்பில் கருத்தரங்கம்! ஆ.இராசா எம்.பி. – இந்து என்.ராம் கருத்துரை!

சென்னை, ஏப்.19-

சென்னை சிந்தனையாளர் மன்றம் சார்பில் மாபெரும் கருத்தரங்கம் நாளை (20.4.2026- திங்கள் கிழமை) மாலை 6 மணியளவில் ஆர்.ஏ.புரம், முத்தமிழ்ப் பேரவை, திருவாவடுதுறை இராஜரத்தினம் கலையரங்கத்தில் நடைபெறுகிறது.

"தொகுதி மறுவரையறை பெரிய வெற்றி தமிழ்நாட்டுக்கு! பெருந்தோல்வி ஒன்றிய அரசுக்கு ஏன்? எப்படி?" எனும் தலைப்பில் நடைபெறும் இக்கருத்தரங்கத்திற்கு முத்தமிழ்ப் பேரவைத் துணைத் தலைவர் குணாநிதி அமிர்தம் வரவேற்புரையாற்றுகிறார்!

சென்னை சிந்தனையாளர் மன்றம் ஒருங்கிணைப்பாளர் விஜயா தாயன்பன் தலைமை வகிக்கிறார்.

இக்கருத்தரங்கில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., 'தி இந்து' குழும இயக்குநர் 'இந்து' என்.ராம் ஆகியோர் கருத்துரை வழங்குகின்றனர்.

இதில் கழக முன்னணியினர், திராவிட இன உணர்வாளர்கள், கழகத் தோழர்கள், சென்னை சிந்தனையாளர்கள் மன்றத்தினர் பங்கேற்றுச் சிறப்பிக்கின்றனர்.

## திருவேற்காட்டில் தி.மு.க. அரசின் சாதனைகளைக் கூறி வீதி வீதியாக

# ஆவடி தொகுதி வேட்பாளர் ஆவடி சா.மு.நாசர் தீவிர வாக்கு சேகரிப்பு!

## பெருந்திரளாக பெண்கள் – பொதுமக்கள் மலர் தூவி, ஆரத்தி எடுத்து வரவேற்றார்கள்!

திருவள்ளூர் ஏப் 19;–

ஆவடி சட்டமன்றத் தொகுதிக் குட்பட்ட திருவேற்காட்டில் திமுக வேட்பாளர் ஆவடி சா.மு.நாசர் வீதி வீதியாக சென்று தீவிரமாக வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். ஆவடி சட்ட மன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் திமுக சார்பில் வேட்பாளராக ஆவடி சா.மு. நாசர் களம் காண்கிறார். தொகுதி முழுவதும் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வரும் அவர் நேற்று திருவேற்காடு நகராட்சிக்கு உட்பட்ட 8,16, 18, 17, 9, 15, 14 ஆகிய , வது வார்டு பகுதிகளில் வீதி வீதியாக சென்று பொதுமக்களிடம் வாக்குகள் சேகரித்தார். அப்போது பல்வேறு பகுதிகளில் அவருக்கு திமுக மற்றும் கூட்டணி கட்சியினர் உற்சாகமாக வரவேற்றனர். வாக்கு சேகரிப்பின் போது சா.மு.நாசர் பேசியதாவது:

இந்த ஆட்சியில் நம் திராவிட மாடல் முதலமைச்சர் சொன்னதையும், சொல்லாததையும் செய்துள்ளார். பெண்களுக்கு முன்னுரிமை தர வேண்டும் என்பதற்காக சொத்தில் சம உரிமை என்பது திமுக ஆட்சியில் கொண்டு வரப்பட்டது. திருவள்ளூர் மாவட்டத்தில் ஒரு லட்சம் பேருக்கு மேல் பட்டா வழங்கப்பட்டுள்ளது. விடியல் பயணத்தில் இரண்டு கோடியே 16 லட்சம் பேர் பயணம் செய்துள்ளனர். பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த மகளிர் உரிமை தொகை திட்டத்தை முதலமைச்சர் செயல் படுத்தி வருகிறார். மகளிர் உரிமைத் தொகையை நிறுத்துவதற்கு சதி திட்டம் தீட்டினார்கள். ஆனால் அதை முறியடித்து 3 மாத மகளிர் உரிமைத் தொகை மற்றும் கோடைக்கால ஊக்கத்தொகை என ரூ. 5 ஆயிரம் வழங்கினார். இந்த ஆட்சியில் பெண்களுக்காக ஏராளமான திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டு பெண்கள் ஒவ்வொருவரையும் தனது சகோதரியாக நினைத்து முதலமைச்சர் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

திருவேற்காடு நகராட்சியில் ரூ.510.63 கோடி மதிப்பில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தப் படுகிறது.

ரூ.110 கோடி மதிப்பீட்டில், திருவேற்காடு நகராட்சிக்கு, செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பொருட்டு, சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் வாரியம் மூலம் குடிநீர் திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட உள்ளது.

திருவேற்காடு தேவி கருமாரியம்மன் கோயிலில் ரூ.87 கோடி மதிப்பில் திருப்பணிகள் நடைபெற்று வருகிறது.

மக்களுக்கான நல்ல திட்டங்கள் தொடர்வதற்கு, மீண்டும் மு.க. ஸ்டாலின் முதலமைச்சராக தொடர்வதற்கு இந்த தேர்தலில் உதய சூரியன் சின்னத்தில் எனக்கு வாக்களித்து மாபெரும் வெற்றி பெறச் செய்யுமாறு இருகரம் கூப்பி கேட்டு கொள்கிறேன் என்றார் அவர்.

இந்த பிரச்சாரத்தில் திமுக நகர செயலாளர் நகர மன்ற தலைவர் என்இகே.மூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.சங்கர், காஞ்சனா சுதாகர், நகர தேர்தல் கண்காணிப்பாளர் எம்.மோகன், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஏ. ஜெ.பவுல், திமுக நகர நிர்வாகிகள் பெனியமின் , வெ.குமாரசாமி, அரசு பானு, ஜெ.சரவணன், செல்வதுரை, ஜோதிநாதன், பாண்டுரங்கன், வட்ட செயலாளர்கள் ராங்கதுரை, சாது, ஜெகன், பி.உமா பதி, பு.பரிசமுத்து, பி.பன்னீர்செல்வம், எம்.காந்தி, பொன்.மனோகரன், துரைகோபால், கே.பி.எஸ்.சுதாகர், ஐ.ஜேக்கப், நூம்பல் ஆசை தம்பி, என்.ராஜி, குமார், கெஜா, இளைஞரணி நிர்வாகிகள் மா.அப்பு(எ) ஜெபராஜன், ஆ.நாராயணன், நரேஷ், குடியரசு, ஜி.பாபு, ஜான், பிரபு, முருகன், கட்டுப்பாக்கம் முரளி, மதன், சுந்தர், தமோதிரன், லோகநாதன், மாரி, மனோஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## செ. குப்புசாமி

### ஏப்ரல் 19 (2013)



தொ.மு.ச. பேரவைத் தலைவராக 1977ஆம் ஆண்டு முதல் கடைசிவரை சிறப்புற பணியாற்றியவர். 1998ஆம் ஆண்டு முதல் மூன்று முறை நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இரயில்வேயில் பணியாற்றியபோது எஸ்.ஆர்.எம்.யூ. தொழிற்சங்கத்தின் துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பின்னர் ரயில்வே பணியிலிருந்து விலகி முழுநேர அரசியல்வாதியாகவும், தொழிற்சங்கவாதியாகவும் பணியாற்றத் தொடங்கியது முதல் கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்துகொண்டு சிறை சென்றார். மிசா கைதியாக ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தார்.

தலைமை கழகத்தில் தலைமை நிலைய செயலாளராக 15 ஆண்டுகாலம் பணியாற்றி கழகத் தலைவர் கலைஞரின் பாராட்டினைப் பெற்றவர். உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினராகவும், முரசொலி அறக்கட்டளை உறுப்பினராகவும் பணியாற்றினார்.

இவரது கழகப் பணியினைப் பாராட்டி சிறப்பிக்கும் வகையில் தலைமைக் கழகத்தின் சார்பில் தலைவர் கலைஞர் அவர்கள் முப்பெரும் விழாவினில் "அண்ணா" விருதினை வழங்கி சிறப்பித்தார்.

மறைகின்ற நாள் வரை, கழகம், கழகம், கழகம் என்றே பாடுபட்ட மறக்க முடியாத மாமனிதர் தான் மறைந்த நண்பர் செ.குப்புசாமி. அவர் மறைந்தாலும், கழகம் இருக்கின்ற வரையில், தொ.மு.ச. பேரவை இருக்கும் வரையில் செ. குப்புசாமியின் நினைவுகள் நீடிக்கும்" என தலைவர் கலைஞர் இரங்கல் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## கழகத் துணைப் பொதுச் செயலாளர்

# கனிமொழி கருணாநிதி எம்.பி.



## தேர்தல் பிரச்சாரச் சுற்றுப் பயண விபரங்கள் (நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர்)

**19.04.2026 (ஞாயிற்றுக்கிழமை)**

| நேரம் | இடம் |
|---|---|
| 10:00 AM | நாகப்பட்டினம் தொகுதி - நெல்லுக்கடை மாரியம்மன் கோயில் எதிர்புறம் |
| 12:00 PM | திருத்துறைப்பூண்டி தொகுதி - ஆலத்தம்பாடி கடைத்தெரு |
| 04:00 PM | திருவாரூர் தொகுதி - காப்பணாமங்கலம் |
| 05.00 PM | நன்னிலம் தொகுதி - கோவிந்தக்குடி |
| 06.00 PM | திருவையாறு தொகுதி - காந்தி சிலை, திருக்காட்டுப்பள்ளி |





பெரம்பூர் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கழக வெற்றி வேட்பாளர் ஆர்.டி.சேகர் 46வது வட்டத்தில் கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகளுடன் வாக்கு சேகரித்தார்.